


எதிலும் அதிரடி. எப்போதும் பயங்கரம். கிட்டத்தட்ட ஹமாஸ் தோன்றிய நாளாக, தினசரி ஏதாவது ஒரு தாக்குதலை நிகழ்த்திக்கொண்டுதான் இருந்தார்கள். அல் காயிதா, ஹிஸ்புல்லா போல சரித்திரம் மறக்கமுடியாத மாபெரும் படுகொலைகளையோ, மிகப்பெரிய ஆள் கடத்தல் வைபவங்களையோ ஹமாஸ் செய்ததில்லை என்றாலும், தொடர்ச்சியாக, நூற்றுக்கணக்கான குண்டு வெடிப்புச் சம்பவங்களுக்கும் தினசரி யுத்தத்துக்கும் அங்கே குறைவே கிடையாது.

தற்கொலைப் படை உண்டு. நேரடி ராணுவம் உண்டு. கடத்தலும் உண்டு. அனைத்திலும் ஈடுபட்ட இயக்கம்தான். சொல்லப்போனால், எப்போதாவது நிகழ்த்தப்படும் மெகா அதிரடிகளைக் காட்டிலும், இந்த தினசரி குட்டி அதிரடிகள் உண்டாக்கும் பாதிப்புகள் மிக அதிகம்.

ஆனால் திட்டமிட்டு, பத்தாண்டு காலத்துக்கு மேலாக இதையெல்லாம் தடையில்லாமல் செய்துவருவதற்குப் பணம் எங்கிருந்து வருகிறது?

மிக முக்கியமான கேள்வி இது. ஹமாஸ் தொடங்கிய காலத்திலிருந்தே இந்தக் கேள்வி அடிக்கடி கேட்கப்பட்டிருக்கிறது. முந்தைய சமூகப் பணிகளுக்காவது உண்டியல் ஏந்தியிருப்பார்கள் என்று யூகிக்கலாம். பிந்தைய 'சமூகக் களையெடுப்பு'ப் பணிகளுக்கு யார் பணம் தந்தார்கள்?

வசூல்தான். இதில் சந்தேகமே இல்லை. ஆனால், ஹமாஸுக்கு வேறு சில வருமான வழிகளும் உண்டு. அவர்கள் சில விலங்குப் பண்ணைகள் வைத்திருக்கிறார்கள். ஐந்து ஆண்டுகளுக்கு முன்புவரை லெபனானிலும் ஜோர்டனிலும் ஏராளமான விவசாயப் பண்ணைகளையும் வைத்து நடத்திக்கொண்டிருந்தார்கள். தவிர, பல நெசவு மையங்களும் ஹமாஸுக்கு உண்டு. ஏராளமான தையல் பள்ளிகளையும் அவர்கள் நடத்துகிறார்கள். பேக்கரி தொழிலைக்கூட அவர்கள் விட்டுவைக்கவில்லை.

இதெல்லாம் சோற்றுக்குச் சரி. துப்பாக்கிகளுக்கு? குண்டுகளுக்கு? கடத்தல் நாடகங்களுக்கு? நேரடி யுத்தங்களுக்கு? சொந்தமாக ராக்கெட் தயாரித்துப் பயன்படுத்துவதற்கு?

முன்பே சொன்னதுபோல், நன்கொடைகள் மூலம்தான் ஹமாஸும் தன் செயல்பாடுகளை நடத்திக்கொண்டிருக்கிறது.

பாலஸ்தீனில் மட்டுமின்றி, வெளிநாடுகளிலும் நன்கொடை திரட்டுவதை ஆரம்ப காலம்முதலே கவனமாகப் பின்பற்றிவருகிறது ஹமாஸ். இப்படிச் சேர்ந்த நன்கொடைகள், தொண்ணூறுகளின் தொடக்கத்திலேயே, சுமார் ஒரு மில்லியன் டாலர்களைத் தாண்டியிருந்ததாக ஒரு கணக்கு உள்ளது.
காஸாவைப் பொறுத்தவரை மக்கள் வரி கட்டுவது போலவே, ஆண்டுதோறும் ஹமாஸுக்கு நிதியளித்துவிடுவார்கள். கட்டாய வரி, தண்டல் என்றெல்லாம் இதனை இஸ்ரேல் அரசு சொன்னாலும் மக்கள் அங்கே விரும்பித்தான் ஹமாஸுக்கு நிதி அளித்துக் கொண்டிருக்கிறார்கள்

என்பதை மறுக்கவே முடியாது.

ஆண்டு நிதி அளிக்க முடியாதவர்கள், மாதம் தோறும் வருமானத்தில் கொஞ்சத்தை அளிப்பது வழக்கம். இதனை ஒரு சமூகக் கடமையாகவே அவர்கள் செய்துவருகிறார்கள்.

ஹமாஸ் உருவாகி, பலம் பெறுவதற்கு முன்னர், வெளி நாடுகளில் வாழ்ந்துகொண்டிருந்த பாலஸ்தீனியர்கள் பி.எல்.ஓ.வுக்குக் கணிசமான நிதி அளித்து வந்தார்கள். ஆனால், ஓஸ்லோ ஒப்பந்தத்துக்குப் பிறகு, அராஃபத்தின் அரசியல் செயல்பாடுகளில் அதிருப்தி கொண்டவர்கள், தங்கள் நிதிப்பாதையை மேற்குக் கரையிலிருந்து காஸாவுக்கு மாற்றிக்கொண்டுவிட்டார்கள்.

இது அப்போது ஹமாஸே எதிர்பாராதது. கணிசமான அன்னியச் செலாவணி அவர்களுக்குக் கிடைத்தது. துணிந்து கருப்பு மார்க்கெட்டில் அதனை மாற்றி, இன்னும் நிறைய பணம் பெற ஆரம்பித்தார்கள்.

இப்படித் தனிமனிதர்கள் தரும் நன்கொடையோடு, ஹமாஸுக்கு உதவும் சில நிறுவனங்களும் உண்டு. இஸ்லாமிய காங்கிரஸாக ஹமாஸ் இருந்த காலத்தில், இஸ்ரேலே உதவியிருக்கிறது என்பதை ஏற்கெனவே பார்த்திருக்கிறோம். அது ஹமாஸ் ஆனபிறகு, மத்தியக் கிழக்கின் பல தேச அரசுகள் தொடர்ச்சியாக ஹமாஸுக்கு உதவத் தொடங்கின. அரசுகள் உதவுவதைப் பார்த்துப் பல நிறுவனங்களும் தங்கள் உதவிக்கரங்களை நீட்டத் தொடங்கின.

இந்தப் பட்டியலில் சவூதி அரேபியா மிக முக்கியம். ஈரான் கொஞ்சம் கணிசமாகவே உதவியது. ஆனால், பெரும்பாலும் அவர்கள் ஹிஸ்புல்லாவுக்குத்தான் பொரு ளுதவி செய்துகொண்டிருந்தார்கள். புல்லுக்கும் கொஞ்சம் பொசிவதற்காக காஸாவுக்கும் அனுப்பத் தொடங்கினார்கள்.

இதில் ஒரு விசேஷம் உண்டு. ஹமாஸுக்கு உதவிய பல நிறுவனங்கள், கொள்கை அளவில் தீவிரவாதத்தை ஆதரிப்பதில்லை. பிராந்தியத்தில் அது ஒரு சமூகக் கடமை என்கிற அளவில்தான் உதவினார்கள்.

கஷ்டப்படும் பாலஸ்தீனியர்களுக்கு உதவுகிறோம் என்று சொல்லித்தான் ஹமாஸ் பணம் வசூலிக்கும். அதில் சந்தேகமில்லை. அவர்கள் பாலஸ்தீனின் விடுதலைக்காகத்தான் இயங்கிக்கொண்டிருந்தார்கள். ஆனால், யுத்தத்துக்காக நிதி கொடுங்கள் என்று அவர்கள் கேட்பதும் இல்லை; யுத்தத்துக்குத்தானே கேட்கிறீர்கள்? கொடுக்கமாட்டோம் என்று நிறுவனங்கள் சொன்னதும் இல்லை!

ஹமாஸ் ஒரு சமூகநல இயக்கமாக இருந்தபோதும் சரி, வன்முறைதான் ஒரே தீர்வு என்று துப்பாக்கி ஏந்தியபோதும் சரி. அதற்கான ஆதரவும் நிதி ஆதாரங்களும் குறையவே இல்லை என்பது மிக முக்கியம். இப்போதும், எப்போதும் ஹமாஸ் இஸ்ரேலியப் பொதுமக்களைத் தாக்கும் நடவடிக்கைகளுக்கு உலக அளவில் பலத்த எதிர்ப்பு இருக்கிறது. பல நாடுகளில் ஹமாஸ் தடைசெய்யப்பட்ட ஓர் இயக்கம். ஆனாலும், ஹமாஸுக்குப் பணம் தொடர்ந்து கிடைத்துக்கொண்டிருப்பதை யாராலும் தடுக்க முடியவில்லை.

இந்த விஷயத்தில் முக்கியமான ஓர் ஆவணம், இஸ்ரேல் அரசின் வெளி விவகாரத்துறை வெளியிட்ட ஓர் அறிக்கை.
2003-ம் ஆண்டு ஜூலை இறுதியில், 'ஹமாஸ் தீவிரவாத அமைப்பின் நிதி ஆதாரங்கள்' (The Financial Sources of the Hamas Terror Organization) என்று இஸ்ரேல் முதன் முதலில் சில தகவல்களை அறிவித்தபோதுதான், ஹமாஸின் நிதி வரும்பாதை குறித்த அடிப்படைத் தகவல்களே வெளியாயின.

மொத்தம் பதினொரு விதங்களில் ஹமாஸுக்குத் தேவையான நிதி ஆதாரங்கள் கிடைத்துக்கொண்டிருப்பதாகப் பட்டியலிடுகிறது அந்த அறிக்கை.

1. சிரியா ஆதரவு. 2. மத்தியக் கிழக்கு நாடுகளில் செயல்பாடுகள். 3. ஹமாஸின் நிதி உதவி அமைப்புகள். 4. தாவா & தீவிரவாதம். 5. பாலஸ்தீனியர்களிடமிருந்து திரட்டும் உதவிகள். 6. மேற்கத்திய நாடுகள். 7. பிரிட்டன் / ஐரோப்பா. 8. ஆசியா. 9. ஆப்பிரிக்கா. 10. வெளிநாடுகளிலிருந்து ஆள் சேர்ப்பது. 11. வெளிநாட்டு அமைப்புகளின் ஆதரவு

வெறும் பட்டியலோடு நிறுத்திக்கொள்ளாமல், ஹமாஸின் நிதி ஆதாரங்களைப் பற்றி ஏராளமான விவரங்களைத் தரும் இந்த அறிக்கையை, ஹமாஸ் ஒப்புக்கொள்ளவும் இல்லை, நிராகரிக்கவும் இல்லை. இதுவே, இந்த ஆவணத்தின் முக்கியத்துவத்துக்குக் காரணமாகிவிட்டது.

1 ஹமாஸின் பல செயல்பாடுகளுக்கு சிரியா முக்கியமான அடித்தளம் அமைத்துக் கொடுத்திருக்கிறது. அதன் முக்கியத் தலைவர்கள் / அதிகாரிகள் பலர் சிரியாவில் வசித்துக்கொண்டு, அங்கிருந்தபடியே இயக்கத்தை வழிநடத்துகிறார்கள். ஹமாஸின் அரசியல் பிரிவு மற்றும் 'அல்காஸம்' என்கிற ராணுவப் பிரிவு ஆகிய இரண்டு அமைப்புகளுடனும் சிரியாவில் உள்ள இந்தத் தலைவர்களுக்குத் தொடர்பு இருக்கிறது.

2 இந்த நடவடிக்கைகள் எவையும் திருட்டுத்தனமாக நடக்கவில்லை. அதாவது, ஹமாஸின் தலைவர்களும் தீவிரவாதிகளும் சிரியாவில் தங்குவதற்கும், தங்களுடைய செயல்பாடுகளைத் தொடர்வதற்கும் அந்த நாட்டின் அரசாங்கம் வழி செய்கிறது. இஸ்ரேலுக்கு எதிரான தாக்குதல் நடவடிக்கைகளைத் திட்டமிடுவதுமுதல், தீவிரவாதிகளுக்குப் பயிற்சி அளிப்பது, நன்கொடை திரட்டுவது, ஆயுதங்கள் வாங்குவது என்று எல்லாவற்றிலும் சிரியா அரசின் உதவி அவர்களுக்குக் கிடைக்கிறது.

3 ஈரான், லெபனான், சவூதி அரேபியா உள்ளிட்ட மத்தியக் கிழக்கு நாடுகளில் ஹமாஸ் தீவிரமாகச் செயல்பட்டுவருகிறது. இந்த நாடுகள் ஹமாஸுக்கு ஆதரவு தருவதோடு, அவர்கள் நிதி திரட்டவும், புதிய உறுப்பினர்களுக்குப் போர்ப் பயிற்சி அளிக்கவும் உதவுகின்றன.

4 ஹமாஸின் நிதி அமைப்புகள், வருடந்தோறும் திரட்டும் நன்கொடையின் மதிப்பு, 'சில பத்து மில்லியன் டாலர்கள்' (tens of millions of dollars) என்று பொதுவாகக் குறிப்பிடப்படுகிறது. உண்மை மதிப்பு, இருபது மில்லியனாகவும் இருக்கலாம், இருநூறு மில்லியனாகவும் இருக்கலாம்!

5 இதில் பெரும்பகுதி நன்கொடை வளைகுடா நாடுகளில் உள்ள பல்வேறு அமைப்புகளிலிருந்து கிடைக்கிறது. அதிலும் குறிப்பாக, சவூதி அரேபியாவிலிருந்து. இந்த நன்கொடைகளின் மொத்த மதிப்பு, வருடத்துக்குச் சுமார் 12 மில்லியன் டாலர்கள். ஈரானிலிருந்து கிடைப்பது, சுமார் 3 மில்லியன் டாலர்கள்.

6 தனிப்பட்டவர்களிடம் நன்கொடை வசூலிப்பதற்கு, மசூதிகளையும், உள்நாட்டு, வெளிநாட்டுச் சேவை அமைப்புகள், அறக்கட்டளைகளையும் பயன்படுத்துகிறது ஹமாஸ். மசூதிகளில், ஆள் சேர்க்கும் நடவடிக்கைகளும் உண்டு.

7 'தாவா' என்பது ஹமாஸுடன் சம்பந்தப்படாத தனி அமைப்பு என்பதை இஸ்ரேல் ஏற்கவில்லை. இதனால், 'தாவா' அமைப்புகளுக்கு மனிதாபிமான நோக்கத்துடன் தரப்படும் நன்கொடைகள்கூட, ஹமாஸின் தீவிரவாதச் செயல்பாடுகளுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் பயன்படுத்தப்படுகிறது என்று குற்றம் சாட்டுகிறது. ஏனெனில், இப்படிச் சேகரிக்கப்படும் நன்கொடைகள் அனைத்தும், ஒரே இடத்தில்தான் சேர்கிறது. அங்கிருந்துதான் பல்வேறு குழுக்கள், பிரிவுகள், அமைப்புகள்,

குறிப்பிட்ட செயல்பாடுகளுக்குப் பிரித்துத் தரப்படுகிறது.

8 முறையான வங்கிக் கணக்குகளால் மட்டுமின்றி, பல முறையற்ற (அதாவது, 'கணக்கில் வராத') வழிகளிலும் பணம் சேர்க்கிறது ஹமாஸ். ஆகவே, இந்த நன்கொடைகளின் அளவு, பயன்பாடுகளைக் கண்டறிவது சிரமம்.

9 மேற்சொன்ன காரணத்தால், உலகெங்கும் உள்ள ஹமாஸ் ஆதரவு அமைப்புகள் அனைத்தின்மீதும், கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று வலியுறுத்துகிறது இஸ்ரேல். ஏனெனில், இங்கே நல்ல நன்கொடை, கெட்ட நன்கொடை என்று எதுவும் இல்லை, எல்லாமே ஒரே இடத்துக்குத்தான் போய்ச்சேர்கிறது. நீங்கள் தந்த நன்கொடை, உண்மையிலேயே மக்கள் நலப் பணிகளுக்குத்தான் பயன்படுத்தப்படுகிறதா என்று கண்டுபிடிப்பது ரொம்பக் கஷ்டம்.

10 இதுபோன்ற நிதி ஆதாரங்களின் உதவியுடன், பாலஸ்தீனப் பகுதிகளில் தனது நடவடிக்கைகளைத் தொடர்வதன்மூலம், அதிகாரபூர்வமான அமைப்பான 'பாலஸ்தீனியன் அதாரிட்டி'யுடன் போட்டியிடுகிறது ஹமாஸ். இது 'பாலஸ்தீனியன் அதாரிட்டி'யின் நம்பகத்தன்மைக்கு ஊறு விளைவிக்கிறது.

11 ஆசியாவைப் பொறுத்தவரை, (அதாவது, மத்தியக் கிழக்கு நாடுகளைத் தவிர்த்த மற்ற ஆசிய நாடுகளில்) ஹமாஸின் நடவடிக்கைகள் மிகக் குறைவாகவே உள்ளன. என்றாலும், இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் படிக்கும் பாலஸ்தீனிய மாணவர்கள், ஆப்கனிஸ்தானில் பயிற்சி பெறும் பாலஸ்தீனியர்கள் ஆகியோரை ஹமாஸ் தமது வருங்கால உறுப்பினர்களாகப் பார்க்கிறது, அவர்களைத் தன்னுடன் இணைத்துக்கொள்ள முயல்கிறது.

12 மசூதிகளில் கூடும் பாலஸ்தீனியர்களை, குறிப்பாக இப்படி வெளிநாடுகளில் படிக்கும் பாலஸ்தீனிய மாணவர்களைத் தமது உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொள்ளும் ஹமாஸ், அவர்களுக்குப் பயிற்சி அளித்து, அந்தந்த நாடுகளுக்கு அனுப்பி, தனது நடவடிக்கைகளைப் பரவலாக்குகிறது. இப்படி ஹமாஸால் தேர்ந்தெடுக்கப்படுபவர்களில் பாலஸ்தீனியர்கள் அல்லாத முஸ்லிம்களும் அடக்கம்.

13 ஆப்பிரிக்காவிலும் ஹமாஸின் நடவடிக்கைகள் குறைந்த அளவே தென்படுகின்றன. விதிவிலக்காக, தென் ஆப்பிரிக்காவில் 'The Holy Foundation' என்னும் ஹமாஸ் ஆதரவு அமைப்பு இயங்கி வருகிறது.

றீ அல் காயிதா, ஹிஸ்புல்லா உள்ளிட்ட பல சர்வதேசத் தீவிரவாத இயக்கங்கள் ஹமாஸின் நடவடிக்கைகளுக்கு உதவுகின்றன. ஹமாஸும் அவர்களுக்கு உதவிகளைச் செய்துவருகிறது. இந்த அமைப்புகளுக்கிடையிலான உறவுகளுக்கு, தனிப்பட்ட நட்பு, இஸ்லாமிய சகோதரத்துவம், ஜிஹாத் கொள்கை ஆகியவை காரணமாக அமைகின்றன.

மேற்படி அறிக்கை வெளியான பிறகுதான், ஹமாஸ் குறித்த ஓரளவு தெளிவான வரைபடமே வெளி உலகுக்குக் கிடைத்தது என்று சொல்லவேண்டும். இந்த அறிக்கை வெளியான சூட்டில், பல தேசங்கள் ஹமாஸுக்கு உதவும் நிறுவனங்களுக்கு சீல் வைக்கும் பணியில் ஈடுபடத் தொடங்கின. மிக முக்கியமாக, ஜெர்மனி, டென்மார்க், ஹாலந்து ஆகிய நாடுகளில் இயங்கிவந்த அல்அக்ஸா அறக்கட்டளைகளும், அமெரிக்காவில் இயங்கிவந்த 'தி ஹோலிலாண்ட்' அறக்கட்டளையும் தடை செய்யப்பட்டன. யாரெல்லாம் ஹமாஸ் அனுதாபிகள் என்று ஒவ்வொரு ஐரோப்பிய தேசமும் அமெரிக்காவும் கண்ணில் விளக்கெண்ணெய் விட்டுக்கொண்டு நோட்டம் பார்க்கத் தொடங்கின.